DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : காளிமுத்து | Father/Husband Name : பன்னீர்செல்வம் |
| Age : 41 | Village : கோவில்பட்டி |
| Taluk : | Calling : காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4 Mar 2026 16:11

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் நாலெட்டின் புதூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, 19.07.2019 ம் தேதி தலைமை காவலர் நடராஜன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை சுமார் 10.00 மணியளவில் வெற்றிலையூரணியை சேர்ந்த மாலதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 284/2019 பிரிவுகள் 294(பி), 354A இ.த.ச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூல்த்தினை நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்தும் ஒரு நகலை எனது பார்வைக்கும் வைத்தார்.

2. நான் வழக்கை என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.07.2019 ஆம் தேதி 11.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த இரண்டு சாட்சிகளையும் விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

3. பின்னர் சாட்சிகள் மாலதி, கண்ணன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் இருந்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்து, எதிரியை தேடி வந்த நிலையில், சுமார் 01.00 மணியளவில் வெற்றிலையுரணியில் வைத்து எதிரியை கைது செய்து, காவல் அடைப்புக்கு உட்படுத்தினேன். பின்னர் சாட்சிகள் சிவா மற்றும் தலைமை காவலர் நடராஜன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் இருந்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரி மீது மேற்சொன்ன அதே குற்றங்களுக்காக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

4. அ.சா.1 மாலதி தலைமை காவலரிடம் எழுத்து மூலமாக புகார் கொடுக்கவில்லை என்றாலும் வாக்குமூலம் தான் கொடுத்துள்ளார் என்றாலும் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எங்கள் காவல் நிலையத்திற்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் 19.07.2019 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு தான் தெரியவந்தது. எங்கள் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு காவலர்கள் செல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 19.07.2019 ஆம் தேதி காலை 11.00 மணி இருக்கும்.

5. இந்த வழக்கு சம்பவத்தின் போது எதிரி மது போதையில் இருந்தாரா என்பது தொடர்பாக என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அ.சா.1 மாலதி கொடுத்த புகார் மற்றும் என்னுடைய விசாரணையில் எதிரி மது போதையில் இருந்ததாக கூறியுள்ளார். நான் எதிரியை கைது செய்த போது எதிரி மது போதையில் இருந்தாரா என்றால் இல்லை. அ.சா.1 மாலதி 19.07.2019 ஆம் தேதி எங்களுடைய காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சென்று இருப்பார் என்றால் காலை சுமார் 10:30 மணிக்கு சென்றிருப்பார். மாலதியுடன் காவல் நிலையத்திற்கு யார் வந்தார் என்றால் கண்ணன் என்ற நபர் வந்தார். கண்ணன் மாலதியின் மகளை திருமணம் முடித்த நபர் என்றால் அவர் மாலதியின் அக்காவின் மருமகன் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. என்னுடைய விசாரணையில் மாலதியின் வீட்டில் யாரெல்லாம் குடியிருந்தார்கள் என்பது தெரிய வந்ததா என்றால் இல்லை. மாலதிக்கு எத்தனை குழந்தைகள் என்பதும் அவருடன் யார் வசித்து வருகிறார்கள் என்பதும் என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அவருக்கு இரண்டு மகன்கள் உண்டு என்பதும், கணவர் வெளியூரில் வேலை செய்கிறார் என்பதும் தெரியவந்தது.

7. சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடம் மாலதியின் வீட்டிற்கு எந்த பக்கம் இருக்கிறது என்றால் வீட்டின் முன்பு ஆகும். மாலதியின் வீட்டு அருகே தெரு விளக்குகள் இல்லை என்றால் , மாலதியின் வீட்டிற்கு அடுத்து ஒரு வீடும் அதுக்கு அடுத்து ஒரு தெருவும் இருக்கிறது, அதை ஒட்டி தெரு விளக்கு இருக்கிறது. மாலதியின் வீட்டின் முன்பாக தெரு விளக்கு இருப்பதாக என்னுடைய மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மாலதியின் வீட்டு அருகே இருக்கக்கூடிய விஜி வீடு, சுரைக்காய் பிள்ளை வீடு மற்றும் இளங்கோவன் இல்லம் ஆகிய வீடுகளில் உள்ள நபர்களை நான் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவ தேதியில் இரவு போலீசார் மாலதியின் வீடு உள்ள தெருவிற்கு பாதுகாப்பிற்காக பணியமர்த்த பட்டார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

8. எதிரி குடியிருக்க கூடிய தெருவும், மாலதி குடியிருக்க கூடிய தெருவும் வெவ்வேறு என்றால் சரிதான். மாலதியின் வீட்டிலிருந்து எதிரியின் வீடு எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக 8 மாதங்கள் பணியாற்றினேன். இந்த வழக்கு எதிரி வெற்றிலையூரணியிலுள்ள ஆதிதிராவிடர் காலணியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி குடியிருக்க கூடிய தெருவின் பெயர் என்னவென்றால் TELC தெரு ஆகும். எதிரி அண்ணா காலனியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரியை நான் எந்த இடத்தில் வைத்து கைது செய்தேன் என்றால் வெற்றிலையுரணியில் உள்ள தேவாலயத்தின் முன்பு வைத்து கைது செய்தேன். நான் சம்பவ இடத்திற்கு

செல்லவில்லை என்பதால் தான் எதிரி குடியிருக்கும் காலனியின் பெயரை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

9. அ.சா.1 மாலதியின் வீட்டு முன்பு திண்ணை கிடையாது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் கூடினார்கள் என்பது என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அது தொடர்பாக யாரும் என்னுடைய விசாரணையின் போது எதுவும் கூறவில்லை. வழக்கு சம்பவம் நடைபெறும் போது மாலதியின் வீட்டு முன்பு அவர் மட்டும் தான் இருந்துள்ளார் என்றாலும், வேறு யாரும் இல்லை என்றாலும் சரிதான், அவருடைய சத்தம் கேட்டு தான் கண்ணன் மற்றும் சிவா சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார்கள். கண்ணனும் சிவாவும் மாலதியின் சத்தத்தை கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான்.

10. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், அது வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இயந்திரத்தனமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

4 Mar 2026 16:42

Judicial Magistrate 2, Sattur